ஆசிரியர் கழகத்திற்கு கல்வித்துறை அமைச்சர்தான் தலைவர். இன்றைக்கு தமிழகம் முழுவதுமுள்ள பெற்றோர் ஆசிரியர் கழகங்கள் மூலம்தான், இத்தகைய கட்டடக் குழுக்கள் உருவாக்கப்பட்டு, அவைகள் உயர்நிலைப் பள்ளியை மேம்படுத்து வதற்கும், உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்றுவதற்கும், உயர்த்துவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. ஆகவே, முறையாக அங்கீகரிக்கப்பட்ட பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் மூலமாக இது மேற்கொள்ளப் பட வேண்டும். அதுவும் சரியாக ரசீதுகள் கொடுத்துத்தான் அப்படிப்பட்ட நன்கொடைகள் வாங்கப்படுகின்றன. தனித்தனி யாக நன்கொடைகள் வாங்குவதோடு, யாராவது வசதி உள்ளவர் கள், கொடை உள்ளம் கொண்டவர்கள் மூன்று இலட்சம், ஐந்து இலட்சம் என்று கொடுக்க முன் வந்தால், அவர்களுடைய பெயரிலேயே அந்தக் கட்டடங்கள் கட்டப்படும் அல்லது குறிப்பாக முன்பே நான் எடுத்துச் சொன்னதைப்போல, உயர் நிலைப் பள்ளிக்கு ஐந்து லட்சம் ரூபாய் அல்லது மேல்நிலைப் பள்ளிக்கு பத்து லட்சம் ரூபாய் என்று வழங்கினால் அவர்கள் பெயரிலேயே பள்ளிக்கூடங்கள் நிறுவப்படும் என்று சொல்லி இருக்கிறேன்.

ஆகவே, இந்த பெற்றோர் ஆசிரியர் கழகம்தான் இந்த முயற்சியிலே ஈடுபட வேண்டும். தனியார் யாரும் ஈடுபடக் கூடாது. குறிப்பாக சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய சொந்த பொறுப்பிலே ஈடுபட்டாலும் இந்த பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் மூலமாகத் தான் ஈடுபட வேண்டுமே தவிர, அவர்கள் முயற்சி எடுத்துக்கொள்ளலாமே தவிர, எங்கேயும் பணத்தை தனியாக அவர்கள் வசூல் செய்யக்கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 101—திரு. சி. சுவாமிநாதன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

101—

தீரர் சத்தியமூர்த்தி பெயரில் போக்குவரத்துக் கழகம்.

** 2097.* **திரு. சி. சுவாமிநாதன் :**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தீரர் சத்தியமூர்த்தி பெயரில் அரசு போக்குவரத்துக் கழகம் தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

1991 செப்டம்பர் 28]

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. சுவாமிநாதன்— இருக்கையில் இல்லை. வினா எண். 102—திரு. ச. காந்திராஜன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

102—

ராமகிரி அணைக்கட்டுத் திட்டம்.

* 280 திரு. ச. காந்திராஜன் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வேடசந்தூர் தொகுதி ராமகிரி அணைக்கட்டுத் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வேடசந்தூர் தொகுதியில் ராமகிரி அணைக்கட்டுத் திட்டம் என்ற அணைக்கட்டு கட்டுகிற திட்டம் எதுவும் இப்போது பரிசீலனையில் இல்லை.

திரு. ச. காந்திராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராமகிரி அணைக்கட்டுத் திட்டம் என்னுடைய தொகுதி குஜிலியம்பாறை ஒன்றியத்தில் அமைந்துள்ளது. அந்தத் திட்டமானது ஆர். கோம்பை கிராமம் சர்வே எண். 49 முதல் 132 வரையில் சில சர்வே நம்பர்களில் மொத்தம் 250 ஏக்கரும், வனத்துறைக்குச் சொந்தமான இடம் 60 ஏக்கர்களும் சேர்ந்து நிலப்பரப்புள்ள மிகவும் தண்ணீர் தேங்கக்கூடிய மத்திய தர மலைப்பகுதி ஆகும். மழைக்காலங்களில் கிடைக்கிற தண்ணீரை வைத்து சுமார் ஆயிரம் ஏக்கருக்கு நேரடியாகவும், 1800 கிணறுகளுக்கு மறைமுகமாகவும் நீர் ஊற்று கிடைக்கிற